பக்கங்கள்: 09 விலை : 20/-


காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 14 ஞாயிற்றுக்கிழமை 28.06.2020 கதிர் 103

# ஊரடங்கு முற்றாக நீக்கம்

கொழும்பு, ஜூன் 28
நாட்டில் இன்று தொடக்கம் ஊரடங்குச் சட்டம் முழுமையாக நீக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

2



# வடக்கு - கிழக்கு தமிழரின் பூர்வீகப் பிரதேசமேயல்ல!

## அது பிரபாகரனின் கோஷம் என்கிறார் எல்லாவல மேத்தானந்த தேரர்

கொழும்பு, ஜூன் 28
இலங்கையில் தமிழர்களுக்கு பூர்வீகப் பிரதேசம் ஒன்றில்லை. இங்கு பௌத்தத்துக்கு முன்னுரிமையளிப்பதில் தவறில்லை. வடக்கு - கிழக்கு பூர்வீகப் பிரதேசம் என்பத பிரபாகரனின் கோஷம். அதைத்தான் நீங்கள் முன்னெடுக்கிறீர்கள் என தமிழர்களை மிரட்டும் தொனியில் கூறியிருக்கிறார், கோட்டாபய ராஜபக்ஷவின் கிழக்கு தொல்பொருள் செயலணியின் உறுப்பினரான எல்லாவல மேத்தானந்த தேரர்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்ட விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் நிலைப்பாட்டையே பிரதிபலிக்கின்றீர்கள். பிரபாகரனே வடக்கு - கிழக்கு தமிழர்களின்

2

# அதிவேக நெடுஞ்சாலை விபத்தில் 9 பேர் காயம்

## 3 பேர் கவலைக்கிடம்

கொழும்பு, ஜூன் 28
தெற்கு அதிகவேக நெடுஞ்சாலையில் ஏற்பட்ட விபத்தில் 9 பேர் காயமடைந்துள்ள நிலையில் அவர்களில் மூவரது நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2

# புலிகளே புலிகளை கொன்றார்களாம்!

* காணாமற்போனோரும் அப்படி கொல்லப்பட்டிருக்கலாம் எனப் புதுக்கதை விடுகிறார் இராணுவத் தளபதி
* சரணடைந்த அனைவரும் புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலை என்றும் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 28**
**விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்தவர்களை அந்த அமைப்பினரே கொன்று உடலை மறைத்தனர். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எனக் கூறப்படுபவர்கள் அப்படி காணாமல் போயிருக்கலாம். அல்லது யுத்தத்தில் இறந்திருக்கலாம். சரணடைந்த அனைவரும் புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா.**

2



# மின் கம்பத்தை பந்தாடிய ‘படி’!

## முதியவர் படுகாயம்

வவுனியா, ஜூன் 28
வவுனியா கண்டி வீதியில் இன்று காலை இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்

இன்று முற்பகல் 11.30 மணியளவில் முல்லைத்தீவிலிருந்து கொழும்பு நோக்கி மீன்களை ஏற்றிச் சென்ற ‘படி’ வாகனம், வவுனியாவில் அமைந்துள்ள வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலத்துக்கு முன்பாகச் இந்தச் சம்பவம் நடந்தது.

(விரிவான செய்தி 06 ஆம் பக்கத்தில்)

# மைத்திரியை சிறைக்கே அனுப்ப வேண்டும்!

கொழும்பு, ஜூன் 28
முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செல்ல வேண்டியது சிறைச்சாலைக்கே அன்றி நாடாளுமன்றத்திற்கு அல்ல என நாமல் குமார தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் சம்பந்தமாக தான் பொறுப்புக் கூறவேண்டியதில்லை என முன்னாள் ஜனாதிபதி வெளியிட்டுள்ள கருத்தை முற்றாக நிராகரிக்கவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர் ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் பாதுகாப்புச் சபைக் கூட்டத்துக்கு பொலிஸ் மா அதிபரைக் கூட அழைக்கவில்லை.

2

# பிரபாகரனால் பெற முடியாத சமஷ்டிக்காக படாத பாடு படுகின்றனர் விக்கியும் ஹூலும்

## சட்ட நடவடிக்கை வேண்டுமென சரத் வீரசேகர வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 28
ஒற்றையாட்சி இலங்கையை சமஷ்டி நாடாக மாற்ற எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும் என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கூறுகின்றார். அதேபோல் தேர்தல் ஆணைக்குழுவில் உள்ள ரத்னஜீவன் ஹூல் இலங்கை சமஷ்டி நாடாக வேண்டும் என்று கூறுகிறார். இவ்வாறு செய்ய அவர்களுக்கு இருக்கும் உரிமை என்ன?

நாட்டை சமஷ்டி நாடாக மாற்றவே பிரபாகரன் 30 நாடுகளுடன் போரில் ஈடுபட்டார். 30 ஆண்டுகளாக பிரபாகரனினால், போரில் செய்ய முடியாததை, இவர்கள் இருவரும்

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## வடக்கு – கிழக்கு தமிழரின் ...................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூர்வீக தாயகம் என்று பிரகடனம் செய்தார். இலங்கையில் தமிழர்களுக் கான பூர்வீக பிரதேசம் எங்குள்ளது. இங்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் சமத்துவமாக வாழ்ந்து வருகின்றார்கள். அவ்வாறிருக்கையில் தமிழர்களுக்கு என்று விசேடமாகபூர்வ பிரதேசமென்ற ஒன்று இல்லை.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தை எடுத்துக்கொண்டால் அது தமிழர்களின் பூர்வீகப் பிரதேசமாகக் கொள்ள முடியாது. கிழக்கிலங்கையில் இரண்டாயிரத்துக் கும் அதிகமான தொல்பொருள் இடங்கள் காணப்படுகின்றன. அவை அனைத்தும் பௌத்த, சிங்கள வரலாற்றுத் தொன்மங்களாகவே காணப்படுகின்றன. அங்கு தமிழர்களுக்கான பூர்வீக பகுதி எங்குள்ளது? சிங்களவர்களுடன் தமிழர்கள் வாழ்வதற்கு எங்குமே தடை செய்யப்படவில்லை.

மேலும் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் சிங்கள பெரும்பான்மையின படையினராலேயே பாதுகாக்கப்பட்டார்கள். கடந்த காலத்தில் தமிழர்களின் போராட்டக் குழுக்கள் அரங்கேற்றி படுகொலைகளை மறந்துவிடவேண்டாம். அவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தவர்கள் சிங்களப் படையினர்களே. ஆகவே இலங்கையில் தமிழர்களுக்கென்று இல்லாத பூர்வீகப் பிரதேசத்தை இருக்கின்றது என்று கூறி இனவாதத்தையும் முரண்பாடுகளையும் தோற்றுவிக்க முயலவேண்டாம்.

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரால் தமிழ் மக்களுக்கு எள்ளளவும் அநீதி இழைக்கப்படவில்லை. அவ்வாறான தலைவர்கள் ஆட்சியில் இருக்கின்ற போது அவர்களுடன் தாம் பிரதிநிதித்துவப் படுத்தும் மக்கள் சார்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுக்களை மேற்கொள்வதில் எவ்விதமான பிரச்சினையும் இல்லை. அதற்கு யாரும் தடைகளை விதிக்கவும் முடியாது.

அரசமைப்பு விடயத்தில் கூட்டமைப்பு போன்ற தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களைத் தவறாக வழிநடத்துகின்றார்கள். இந்த நாட்டில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டிய அவசியமில்லை. அசாதாரண சூழல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதன் பின்னர் தென்னிலங்கைக்கு நிகராக வடக்கையும் கிழக்கையும் அபிவிருத்தி செய்வதில் மத்திய அரசு பல்வேறு பணிகளை முன்னெடுத்துள்ளது. அவ்வாறிருக்கையில் அதிகாரப்பகிர்வின் அவசியம் என்ன?

சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்ட உள்நோக்கத்திலேயே அதிகாரப் பகிர்வைத் தமிழ்த் தலைவர்கள் கோருகின்றார்கள். மத்திய அரசின் ஆளுகைக்குள் இருப்பதிலுள்ள பிரச்சினைகள் என்ன? மத்திய அரசு பாரபட்சமின்றிச் செயற்படுகின்ற நிலையில் அதிகாரப்பகிர்வு யாருக்கு தேவையாகவுள்ளது?

நாட்டைச் சிறப்பாக நிர்வகித்துச் செல்வதற்கான அடிப்படைச் சட்டமாக இருப்பதே அரசமைப்பாகும். அதில் விரும்பியவாறெல்லாம் திருத்தங்களை மேற்கொள்ள முடியாது.

மாறிவரும் ஒழுங்குகளுக்கு ஏற்ப அடிப்படைச் சட்டங்களில் மாற்றங்கள் அவசியமாக இருந்தால் உரிய பிரேரணைகள் ஊடாக நாடாளுமன்றில் அரசமைப்புத் திருத்தங்களை மேற்கொள்ள முடியும்.

அதனைவிடுத்து விரும்பிய நபர்களுக்கோ அல்லது குழுவினருக்கோ ஏற்றால் போல் அரசமைப்பில் மாற்றங்களைச் செய்வது கேலிக்கூத்தாகும். குறிப்பாக அதிகாரப்பகிர்வு விடயத்தில் ஒருதரப்பினரை திருப்தி செய்வதற்காக திருத்தங்களை மேற்கொள்ள முடியாது. மேலும் புதிய அரசமைப்பொன்று இந்த நாட்டிற்கு அவசியமா? இல்லையா என்பதை ஜனாதிபதியும் பிரதமருமே தான் தீர்மானிக்க வேண்டும்.

இந்த நாட்டில் பெரும்பான்மையானவர்கள் சிங்களவர்களாகக் காணப்படுகின்றார்கள். கிறிஸ்தவம், இஸ்லாம் சமயங்கள் வர முதலே பௌத்த சமயம் இருந்துவருகின்றது. அத்துடன் அரசமைப்பிலும் அதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. ஆகவே பௌத்தத்தை பேணிக் காப்பதில் தவறில்லை. அதேநேரம் அவர்கள் ஏனைய இன, மதங்களையும் புறந்தள்ளவில்லையே. அதற்கும் முக்கியத்துவம் அளிக்கின்றார்கள்.

பௌத்த பிக்குமார் அரசியலுக்காக பயன்படுத்தப்படவில்லை. மாறாக நாட்டில் பிரச்சினைகள் ஏற்படுகின்றபோது அவர்களே முன்னிலையாகி அவற்றை சுமுகமாக தீர்ப்பதற்கு உதவியிருக்கின்றார்கள் என்பதே இந்தநாட்டின் வரலாறாக இருக்கின்றது. அவ்வாறு அவர்கள் செயற்பட்டதன் காரணத்தினால் தான் தமிழ், முஸ்லிம் தரப்பினரும் இங்குள்ள பல் மதத்தவர்களும் பாதுகாப்பாக இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

என்னைப்பொறுத்தவரை கருணா அம்மான் விடுதலைப்புலிகள் அமைப்பின் ஜனநாயக முரண்பாட்டுச் செயற்பாடுகளால் வெறுப்படைந்தே அதிலிருந்து வெளியேறினார். எம்முடன் நட்புறவுகளை மேம்படுத்தி இணைந்து செயற்பட்டார். அவர் கடந்த காலத்தைப் பற்றிக் கூறியிருக்கின்றார்.

அவர் மீது நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் இந்த நாட்டில் உயிர்ப்பலிகளுக்குக் காரணமாக இருந்த அரசியல் கட்சிகள் மீதும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஆகவே வரலாற்றில் கடந்த காலங்களில் தவறிழைத்தவர்கள் அதனை மீண்டும் செய்யாது இழைக்கப்பட்ட தவறுகளை தவறு என்றெண்ணி நினைவு கூருவது எந்தவகையில் தவறாகும்? தற்போது அரசியலை மையப்படுத்தியே கருணா அம்மான் மீது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன – என்றார்.

# தேசியப் பட்டியல் ஊடாக சபைக்கு செல்லவேமாட்டாராம் சுமந்திரன்



தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குள் நுழைய மாட்டேன் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தமிழ் வானொலி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஒருவேளை நாடாளுமன்ற தேர்தலில் குறைந்தளவான வாக்குகளை பெற்றுக் கொண்டால், தேசிய பட்டியலின் ஊடாக நாடாளுமன்றம் செல்வீர்களா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், "இல்லை அவ்வாறு செல்ல மாட்டேன். அதைவிட சிறப்பான வெற்றி ஒன்றை பதிவு செய்வேன்" – என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரபாகரனால் பெற முடியாத சமஷ்டிக்காக ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து யோசனை மூலம் செய்ய முயற்சிக்கின்றனர்.

இதற்கு அமையவே நல்லாட்சி அரசும் அரசமைப்பு யோசனை ஒன்றைக் கொண்டுவந்தது. நாட்டைப் பிளவுப்படுத்துவதற்காக நிபந்தனைகளை விக்னேஸ்வரன் ஒவ்வொன்றாக வெளியிட்டு வருகின்றார். அவர் வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்தபோது சிங்கள இனத்திற்கு எதிராக 27 யோசனைகளை நிறைவேற்றினார்.

1947ஆம் ஆண்டு முதல் தற்போது வரை ஆட்சி செய்த சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை படிப்படியாக இனப்படுகொலை செய்ததாக முதலாவது யோசனையைக் கொண்டு வந்தார்.

இரண்டாவது யோசனையாக அன்றில் இருந்து இன்று வரை தமிழ்ப் பெண்களை சிங்கள ஆட்சியாளர்கள் கருத்தடைக்கு உட்படுத்தியதாக யோசனை கொண்டு வந்தார். இவை எந்தளவுக்கு பொய்யான கேலிக்குரிய யோசனைகளாக இருக்கின்றன.

விக்னேஸ்வரன் இந்த யோசனைகளை நிறைவேற்றும்போது சஜித் பிரேமதாஸ உட்பட நல்லாட்சி அரச தரப்பினர் எவரும் இவற்றை நிராகரிக்கவில்லை.

அதேபோல் ஹூல் தொடர்பாகவும் நாம் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். சுயாதீன ஆணைக்குழுவின் உறுப்பினராக இருந்துகொண்டு நாட்டை சமஷ்டி நாடாக மாற்ற வேண்டும் என்று கூற முடியாது.

விக்னேஸ்வரனுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான காலம் வந்துள்ளது.

கருணா அம்மான் எங்களுடன் இல்லை. அவர் எமது கட்சியின் ஊடாகவும் போட்டியிடவில்லை. அவர் எங்களுடன் இருக்கின்றார் என்பது தவறானது.

கருணா அம்மான் வெளியிட்ட கருத்து மிகவும் பாரதூரமானது. இதற்கு எதிராக கட்டாயம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போரில் வெற்றி பெற அவரும் ஓரளவுக்கு பங்களிப்பு வழங்கினார். கருணாவுக்கு ஏற்கனவே மன்னிப்பு வழங்கப்பட்டுவிட்டது. அதனால் புலிகள் அமைப்பில் இருந்தபோது அவர் செய்த கொலைகளுக்குத் தண்டனை வழங்க முடியாமல் போகும்.

எனினும், அவர் தற்போது கூறியுள்ள விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் – என்றார்.

## புலிகளே புலிகளை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசில் இராணுவச் செயற்பாடுகள், வடக்கு – கிழக்கு தமிழர் பிரதேசங்களில் காணப்படும் இராணுவ ஆதிக்கம் மற்றும் இறுதி யுத்தத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலமே இராணுவம் மற்றும் பாதுகாப்புப் படைகளுக்குப் பொற்காலமாக அமையும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. கடந்த காலங்களை விடவும் இப்போது நாட்டில் இராணுவம் பலப்படுத்தப்படுகின்றது.

எனினும் நாடு இராணுவ மயமாவதாக குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டே வருகின்றன. ஓய்வுபெற்ற தகுதியான அதிகாரிகள் தமது திறமையை சிவில் சேவைகளில் வெளிப்படுத்துவதில் என்ன தவறு உள்ளது.

இராணுவத்தை அதிகமாகப் பயன்படுத்தி நாட்டின் சேவையைப் பெற்றுக் கொள்வது இராணுவ மயமாதல் அல்ல. தேவைக்கேற்ப இராணுவத்தின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள ஜனாதிபதி நினைகின்றார்.

மாறாக இந்த நாட்டை இராணுவ மயமாக்க வேண்டும் என்ற தேவையொன்று இல்லை. இராணுவம் ஆட்சியைக் கைப்பற்ற நினைக்கவில்லை. ஜனாதிபதியும் இராணுவத்தை ஆட்சிக்கு கொண்டுவர நினைக்கவும் மாட்டார்.

மேலும் வடக்கு – கிழக்கில் இராணுவ முகாம்களை அகற்றவேண்டிய தேவை இல்லை. இருக்கும் முகாம்களை மேலும் பலப்படுத்தி நாட்டின் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தவேண்டுமே தவிர இருக்கின்ற முகாம்களை அகற்ற எமக்கு எந்த நோக்கமும் இல்லை. வடக்கில் முகாம்களில் இராணுவம் பலப்படுத்தப்படுகின்றன என்பதற்காக மக்களின் செயற்பாடுகளில் இராணுவம் தலையிடும் என்ற அர்த்தமில்லை. அதேபோல் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என எவருமே இல்லை. யுத்த காலகட்டத்தில் கைதுசெய்யப்பட்ட மற்றும் சரணடைந்த 12 ஆயிரத்துக்கும் அதிகமான விடுதலைப்புலிகளைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்தி அவர்களைச் சமூகத்தில் இணைத்துள்ளோம்.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் பலரை புலிகளே கொன்றனர். கொன்று அவர்களின் உடல்களை மறைத்தனர். அவ்வாறு மறைத்த உடல்களை எம்மால் எவ்வாறு கண்டறிய முடியும்?

காணாமல் போனவர்கள் எனக் கூறும் நபர்கள் அந்த பட்டியலில் இருக்கலாம். அதேபோல் யுத்தத்தில் எமக்கு எதிராக போராடியவர்கள் கொல்லப்பட்டனர், ஏனையோர் சரணடைந்தனர்.

சரணடைந்த நபர்களுக்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். விடுவிக்கப்பட்டவர்களில் காணாமல் ஆக்கப்பட்டதாகக் கூறப்படும் அல்லது தேடப்படும் நபர்கள் இல்லை என்றால் அந்த நபர்கள் இறந்திருக்க வேண்டும். யுத்தத்தில் இறந்தவர்களில் எமக்குக் கிடைத்த சடலங்களை நாம் ஒப்படைத்துள்ளோம். செஞ்சிலுவை சங்கம் ஊடாக அவை ஒப்படைக்கப்பட்டுள்ளன – என்றார்.

## அதிவேக நெடுஞ் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பத்தேகம மற்றும் பின்னதுவ நுழைவாயிலுக்கும் அருகில் இன்று வாகன விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் சிக்கி 9 பேர் காயமடைந்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் அவர்களில் 3 பேர் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் இருந்து காலி நோக்கிப் பயணித்த கார் ஒன்று மினிபஸ் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட வேளையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஊரடங்கு ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா வைரஸைத் தடுக்கும் வகையில் கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி முதன்முதலாக அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு சட்டம், ஜூன் மாதம் 13ஆம் திகதி முதல் தினந்தோறும் நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 4 மணி வரையில் அமுல்படுத்தப்பட்டு வந்தது.

இந்தநிலையில், இன்றிலிருந்து ஊரடங்குச் சட்டம் முழுமையாக நீக்கப்பட்டுள்ளது.

## மைத்திரியை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் அனைத்து பாதுகாப்புத் துறைகளுக்கும் பொறுப்பாக இருந்த முன்னாள் ஜனாதிபதி தனது பொறுப்பில் இருந்து விலகிச் செல்ல முடியாது. அவரை அனுப்பவேண்டியது நாடாளுமன்றத்திற்கு அல்ல, சிறைச்சாலைக்கு எனவும் நாமல் குமார குறிப்பிட்டுள்ளார்.

நாமல் குமார நல்லாட்சி அரசின் காலத்தில் ஜனாதிபதி உள்ளிட்ட முக்கியஸ்தர்களைக் கொலை செய்யச் சதித் திட்டம் இருப்பதாக கூறி ஒலித்தட்டுக்களை வெளியிட்ட காரணத்தினால், அப்போது பரப்பரப்பாக பேசப்படும் நபராக இருந்தார்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000

மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# 'ராகிங்' எனும் சமூகப் பிணி

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் மிகப் பெரும் சமூகக் கொடுமை தொடர்பாக புத்திஜீவி ஒருவர் கொழும்பில் ஓர் உண்மையைப் பகிரங்கமாகப் போட்டுடைத் திருக்கின்றார்.

'ராகிங்' என்ற மிக மோசமான - மிகக் கொடூரமான - மிக அநாகரிகமான - காட்டுமிராண்டித்தனமான - ஒரு பண்பியல்பு பற்றிய உண்மையை அவர் பட்டவர்த்தனமாக எடுத்துரைத்திருக்கின்றார்.

அவர் - சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா.

இலங்கையின் எந்த சட்டவாக்க உறுப்பினரும் கடைசி வரை 'ராகிங்' கொடூரத்தை எதிர்க்கும் ஒற்றை நிலைப்பாட டில் உறுதியாக இருந்தவர்கள் அல்லர் என்று வேதனையு டன் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

சித்திரவதைகளினால் பாதிக்கப்பட்டோரை ஆதரிப்பதற் கான சர்வதேச தினத்தை ஒட்டி, இலங்கை மனித உரிமை கள் ஆணைக்குழு இணையத்தளம் ஊடாக நடத்திய கலந் துரையாடலில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இந்த உண்மை யைப் போட்டுடைத்திருக்கின்றார் அவர்.

அதிகாரத்தைக் கையில் வைத்திருந்த சட்டவாளர்கள் எவருமே இது விடயத்தில் மேம்போக்காகப் பேச்சுக்குக் கருத்து வெளியிட்டு வந்துள்ளனரே தவிர, இது விடயத்தில் உறுதி யான நடவடிக்கை எடுக்கவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தன்னுடைய அதிகார காலத்தில் ஏனைய விடயங்கள் போல, இந்த 'ராகிங்' விவகாரத்தில் ஏதோ வெட்டிப் பிடுங்கப் போகின்றவர் போல பேசினாரே தவிர, ஒரு மண்ணும் நடக்கவில்லை.

இப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் ஏதோ செய்யப் போகின்றார் என முழங்கியிருந்தார். எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை.

ஏன், இதற்கு முன்னர் இருந்த பிற ஆட்சியாளர்களும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லைதான்.

போராட்ட காலத்தில் தமிழர் தாயகத்தல் 'ராகிங்' கொடூரம் வெளிப்படையாக அதிகம் தெரியாத நிலை இருந்தாலும் கூட, அது முற்றிலும் தடுக்கப்படவில்லை. மற்றைய சமூக விரோதச் செயல்களைத் தடுப்பதில் தீவிரமும் முனைப்பும் காட்டிய விடு தலைப் புலிகள் கூட, தமிழர் சமூகத்திலிருந்து 'ராகிங்' கொடூரனை அழிப்பதில் - அகற்றுவதில் - முழு முனைப்புக் காட்டவில்லை என்பது வரலாற்றுப் பதிவு.

விடுதலைப் புலிகளின் காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்துக்குத் தலைவர், செயலாளராக இருந்த பலர் இன்று நம் மத்தியில் பல அரசியல் கட்சிகளின் பிரமுகர்களாக இருக்கின்றனர். அவர்களின் மனத்தைத் தொட்டு அவர்கள் பதிலளிப்பார்களாயின் இவ்விடயத்தில் உண்மை நிலைமை அம்பலமாகும்.

'ராகிங்' சமூக விரோதச் செயலை சமூகத்தில் இருந்து அகற்றுவதற்கு ஆட்சித் தலைவர்கள், அதிகாரத்தில் இருந்தோர், சமயத் தலைவர்கள், சமூக வழிகாட்டிகள் - ஏன் ஒட்டுமொத்த சமூகத்தினர் - பொறுப்புடனும் முழுப் பற்றுறுதியுடனும் செயற்படவில்லை. ஏனோதானோ என்ற நடிப்புப் பாணி யிலேயே செயற்பட்டு வந்துள்ளார்கள் என்பதுதான் பேரா சிரியர் ஹரேந்திர டி சில்வா போன்ற புத்திஜீவிகளினதும் அவதானிகளினதும் கருத்து நிலைப்பாடாகும்.

அந்த மதிப்பீடு தவறானதல்ல என்பதை உறுதி செய்ய விரும்புகின்றோம்.

"உலகின் மிக மோசமான - கொடூரமான - பயங்கரவாத இயக்கமான விடுதலைப் புலிகளையே அழித்தோம் நாங்கள்" - என்று வீரவசனம் பேசும் ராஜபக்ஷ அரசினாலும் கூட இந்த ராகிங் கொடூரத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை.

"உலகின் நான்காவது பெரிய இராணுவமான இந்தி யப் படையை ஈழ மண்ணிலிருந்து புறமுதுகிட வைத்தோம்" எனப் பெருமை பேசிய புலிகள் கூட 'ராகிங்' கொடூரத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தி விடவில்லை.

ஆக, யார் என்ன பேசினாலும் -

இந்தச் சமூகச் சீரழிவுக்கு எதிராக எத்தகைய அறிக்கைப் போர்கள், கண்டனக் குரல், எதிர்ப்புக் கோஷங்கள் முழங்கி னாலும் -

ஆட்சி அதிகாரத்திலும், நிர்வாகத்திலும் இருப்போரின் மனதில் இந்தச் சீரழிவு ஒழிக்கப்பட வேண்டும் என்ற கட்டுறுதி யான முடிவு வரும் வரை, இந்த ராகிங் கொடூரம் சமூகப் பிணியாக, இலங்கையைப் பிணித்திருப்பதை - பீடித்தி ருப்பதை - தவிர்க்க முடியாது என்பது உறுதி.

# முன்னாள் போராளிகளுக்கு இடமளிக்காத கூட்டமைப்பு பிரிந்தவர்களுக்கு இடமளிப்பது என்பது தேர்தல் நாடகம்

## மாவையின் கருத்துக்கு சிவாஜிலிங்கம் பதிலடி



(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், ஜூன்28

முன்னாள் போராளிகளுக்கு கூட ஓர் உரிய இடத்தை வழங்காத தமிழ் தேசியக் கூட்டமைப்பு தங்களிடம் இருந்து பிரிந்தவர்களை மீண்டும் இணைத்துக் கொண்டு பயணிக்கப் போவ தென்பது வெறும் தேர்தலுக்கான நாடகமாகவே பார்க்கின்றேன் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித் தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்தவர்களையும் இணைத்து தேர்தலின் பின் அடுத்த கட்டத்துக்கு நகரவோம் என்ற மாவை சேனாதிராசாவின் கருத்து தொடர்பில் விளக்கமளிக்கும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இறுதி யுத்தம் முடிவடைந்து ஆறு ஆண்டு களுக்கு பிறகு ஜனநாயக போராளிகள் கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து 2015 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் பணியாற்ற வந்த போது அதனை கூட்டமைப் பினர் மறுத்தனர். அதன் பின்னர் 2018 இல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கூட ஜனநாயக போராளிகள் கட்சியினருக்கு வாய்ப்பு அளிக்கவில்லை. மேலும் முன்னாள் போராளிகளுக்கு என தனிப்பட்ட ஒதுக்கீடுகள் எதுவும் வழங்கப்படவில்லை.

2020 பொதுத் தேர்தலில் மஹிந்த ராஜபக் ஷவின் கட்சியில் இருந்து வந்த மடக்களப்பை சேர்ந்த சாணக்கியன் போன்றவர்களுக்கு கூட தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இடம் கொடுக் கப்பட்டுள்ளது. அனால் ஒரு முன்னாள் போரா ளிக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இடம் கொடுக்கப்பட்டுள்ளதா?

ரெலோவில் நான் அங்கம் வகித்த போது 2018 உள்ளூராட்சித் தேர்தல்களில் மடடக் களப்பு கோரதீவு பகுதியில் ரஜனி எனும் விடு தலைப் புலிகளின் முன்னாள் தளபதியை பிர தேச சபைத் தலைவராக்கி இருக்கிறோம். கடற் புலிகளின் இரண்டாம் மட்ட தலைவர் ரோஷனை நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவராக்கி இருக் கிறோம். அதனை விட பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பில் திரு கோணமலை மாவட்டத்தில் முன்னாள் அரசி யல் துறைப் பொறுப்பாளர் ரூபனை முதன்மை வேட்பாளராக நியமித்து இருக்கிறோம்.

இவ்வாறு முன்னாள் போராளிகளுக்கென ஓர் உரிய இடத்தை வழங்காத தமிழ் தேசியக் கூட்டமைப்பு தங்களிடம் இருந்து பிரிந்தவர் களை மீண்டும் இணைத்துக்கொண்டு பயணிக்க போவதென்பது வெறும் தேர்தலுக்கான நாடக மாகவே பார்க்கின்றேன். இதனை இதய சுத்தி யான உண்மையான அழைப்பாக தமிழ் மக் கள் எவ்வாறு எடுத்துக் கொள்வார்கள்?

முன்னாள் போராளிகள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு ஆதரவு தெரிவிப்பதனை பட்ட பகலிலே விளக் கையும் பிடித்துக்கொண்டு கிணத்திலே விழு கின்ற செயற்பாடாகவே நான் பார்க்கின்றேன். தமிழைப் பழித்தவனை தாய் தடுத்தாலும் விடேன் என்று சொல்லுவதைப் போல விடுத லைப் போராட்டத்தை, விடுதலை இயக்கத்தை பழித்தவர்களை தாய் தடுத்தாலும் விடேன் என் பதைப் போல் செயற்படாமல் அவர்களுடைய காலடியில் சமரசமாகியுள்ளனர்.

பன்னிரெண்டாயிரம் விடுதலைப் புலிகள் சயனைட் கடித்து இறந்திருக்க வேண்டும் என்று கூறிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அங்கம் வகிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் ஆதரிப்பது என்பது கண்ணை விற்று சித்திரம் வாங்குவதுக்கு ஒப்பானது. இனத்தினுடைய சுயமரியாதைக்காக போராடி அரசியலுக்குள் நுழைந்த ஜனநாயக போராளி கள் கட்சியினர் தங்களின் சுய மரியாதையை கேள்விக்குரியதாக்கி மாற்றான் காலில் மண் டியிட்டு கிடக்கின்றமை எமக்கு வேதனையளிக் கின்றது. – என்றார். (ம–11)

# 295 கிலோ பீடியுடன் கடலில் இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 28

வடக்குக் கடற்பரப்பில் 295 கிலோ பீடிகளுடன், யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த இருவர் கடற்படை யினரால் கைது செய்யப்பட்டுள் ளனர்.

கடல் வழியாக இலங்கைக்குப் போதைப்பொருள் கொண்டு வரப் படுவதைத் தடுக்கும் வகையில், கடற்படையினர் வழமையான தேடுதல் நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்தபோது, சந்தேகத்துக் கிடமான டிங்கி படகொன்று அவ தானிக்கப்பட்டு, சோதனைக்கு உட் படுத்தப்பட்டது.

அதில் 06 பொதிகளில் அடைக் கப்பட்ட நிலையில் 295 கிலோ பீடி இருந்தமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளதோடு, சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ள தாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 33, 37 வயதுடைய சந்தேகநபர் களே இவ்வாறு கைது செய்யப்பட் டுள்ளனர்.

கைப்பற்றப்பட்டுள்ள பீடி மற் றும் டிங்கி படகுடன் சந்தேகநபர் களை, மேலதிக நடவடிக்கைக ளுக்காக சுங்கானை கலால் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக, கடற்படை ஊடகப் பிரிவு தெரி வித்துள்ளது.

# கொழும்பு பங்குச் சந்தைக்கு புதிய தலைவர் நியமனம்



கொழும்பு பங்குச் சந் தையின் புதிய தலைவ ராக துமித் பெனாண்டோ ஏகமனதாக நியமிக்கப்பட் டுள்ளார்.

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

Middlebury College இல் பௌதீகவியல் மற்றும் பொருளாதாரத் துறையில் பட்டத்தையும், Harvard Business School இல் வியாபார பட்டத்தையும் அவர் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# முகக் கவசம் அணியாதவர்களுக்கு வேறொரு குற்றச்சாட்டில் தண்டம்

வவுனியா, ஜூன் 28

வவுனியாவில் முகக்கவசம் இன்றி பயணிப் பவர்களிடம் தண்டப்பணம் விதிக்கும் நடவடிக்கையில் வவுனியா பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள் ளது. இதனடிப்படையில் முகக்கவசம் அணியாது வீதிகளில் செல்பவர்களுக்கு தண்டப்பணம் விதிக் கப்படுகின்றது.

நேற்று முன் தினம் முகக்கவசம் அணியாது மோட்டார் சைக்கில் சென்றவர்களுக்கு தலைக்கவசம் அணியவில்லை என்ற குற்றச்சாட்டில் தண்டப் பத் திரமும் முகக்கவசம் அணியாது வாகனங்களில் செல்பவர்களுக்கு ஆசனப்பட்டி அணியவில்லை என்ற குற்றசாட்டிலும் தண்டப் பத்திரம் வழங்கப்படு கின்றது என்று கூறப்பட்டது.

# தந்தை, மகன் உயிரிழப்பு பெரியதொரு கூட்டுச் சதி!

## நடிகர் சூர்யா கருத்து

சாத்தான்குளத்தில் பொலிஸாரின் தடுத்து வைப்பில் தந்தை - மகன் அடுத்தடுத்து உயிரிழந்த சம்பவத்தைக் கண்டித்துத் தென்னிந்தியத் திரைப்பட நடிகர் சூர்யா கருத்து வெளியிட்டார்.



பொலிஸாரின் அதிகாரஅத்துமீறல்முடிவுக்கு வர வேண் டும் என்று தெரிவித்த அவர் இது அரசதரப்பினரின்பெரியதொரு கூட்டுச் சாதி என்றும் சாடினார்.

இதுகுறித்துச் சூர்யா வெளியிட் டுள்ள அறிக்கையில், மேலும் குறிப்பிட்டி ருப்பதா வது:-

மன்னிக்க முடியாத குற்றங்களைச் செய்தவர்களுக்குக்கூட மரண தண்டனைகூடாது என்று மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்துகின்றன.

சாத்தான்குளம் பொலிஸ் நிலையத்தில், இரு அப்பாவி உயிர்களுக்கு மரணம் ஏற்படுத்துமளவுக்கு நிகழ்ந்த பொலிஸாரின் அத்துமீறலானது பொலிஸாரின் மாண்பைக் குறைக்கும் செயல். தவறி நடந்த சம்பவம் என்று இதைக் கடந்து செல்ல முடியாது. பொலிஸாரால் தாக்குதலுக்கு ஆளான இருவரையும் பரிசோதனை செய்த அரச மருத்துவர், அவர்கள் இருவரும் நலமாக இருப்பதாகச் சான்று அளித்திருக்கிறார்.

நீதியை நிலைநாட்ட வேண்டிய குற்றவியல் நீதிமன்ற நடுவர், பாதிக்கப்பட்டவர்களின் நிலையைப் பரிசோதிக்காமல், இயந்திர கதியில் அவர்களைச் சிறையில் அடைக்க உத்தரவிட்டுள்ளார். சிறையில் நடத்தப்பட வேண்டிய சோதனைகளும் முறையாக நடக்கவில்லை. இவை திட்டமிடப்பட்ட குற்றங்கள் என்றார்.

# வெடித்தது வேட்டைக் குண்டு! ஒருவர் சாவு 6 பேர் படுகாயம்



இந்தியாவில் வேட்டைக்காக நாட்டு வெடிகுண்டு தயாரித்தபோது ஏற்பட்ட வெடி விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

6 பேர் படுகாயமடைந்தனர். ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாவின் நரிக் குறவர் குடியிருப்புப் பகுதியில் இந்தச் சம்பவம் நடந்தது.

இதுகுறித்து மேலும் தெரிய வருவதாவது:-

அந்தப் பகுதியில் வசித்து வருகின்ற 50க்கும் மேற்பட்டவர்கள் அருகில் உள்ள காட் டுப் பகுதியில்வேட்டைத்தொழிலில்ஈடுபடுகின்றனர். அங்குள்ள தமிழன் என்பவரது வீட்டில் சிலர் இரகசியமாகக் கூடிக் காட்டுப்பன்றிக்கு வைப்பதற்கான நாட்டு வெடிகுண்டு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது, அந்தக் குண்டு திடீரென வெடித்தது. அந்த வீடு தரைமட்டமானது. அங்கிருந்த அனை வரும் தூக்கி வீசப்பட்டனர். துக்கி வீசப்பட்ட வர்கள் மீட்கப்பட்டு வாலாஜா அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்தார். 6பேருக்குப் படுகாயங்கள் ஏற்பட்டுள்ளன. விபத்து ஏற் பட்ட இடத்தில் மாவட்டப் பொலிஸ் கண்காணிப்பாளர் மற்றும் பொலிஸார் ஆகியோர் விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

விபத்து ஏற்பட்ட இடத்தில் இருந்துவெடிகுண்டு தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட மூலப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன. இது குறித்து மேலதிக விசாரணைகளை முடுக்கிவிட் டுள்ளதாகப் பொலிஸ்தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

# மும்பைத் தாக்குதல் சந்தேக நபரை இந்தியாவிடம் ஒப்படைக்க முடியாது

## அமெரிக்கச் சட்டத்தரணி தெரிவிப்பு





2008ஆம் ஆண்டு இந்தியாவின் மும்பை நகரில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் சிறையில் அடைக்கப்பட்டிருந்த டேவிட் ஹெட்லி என்பவருக்குக் கொரோனா வைரஸ் அறிகுறிகள் உணரப்பட்டதன்காரணமாகச் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

அவரிடம் இந்தியா விசாரணை நடத்தக்கோரியதால் விடுதலை செய்யப்பட்ட 2ஆவது நாளில் கைது செய்யப்பட்டார். இந்த நிலையில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள பெடரல் நீதிமன்றத்தில் நடந்த இந்த வழக்குத் தொடர்பாக அமெரிக்க அரச உதவிச் சட்டத்தரணி ஜெனரல் ஜோன் ஜே. லுலேஜியான் தெரிவித்தபோது, அமெரிக்காவில் நடந்த குற்றத்தை டேவிட் ஹெட்லி ஒப்புக்கொண்டு தன்னை மன்னிக்குமாறு நீதிமன்றத்தில் கேட்டுக் கொண்டார்.

எனவே டேவிட் ஹெட்லியை இந்தியாவுக்கு நாடு கடத்த முடியாது என்றார்.

**பின்னணி**

2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி மும்பை தாஜ் ஹோட்டல் உட்படப் பல இடங்களில் லஷ்கர் - இ - தொய்பா ஆயததாரிகள் ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதல்களில் 166 பேர் கொல்லப்பட்டனர். 240க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். இதுதொடர்பாக கனடாவைச் சேர்ந்த பாகிஸ்தானியரான, தஹாவூர் ராணா அமெரிக்காவின் சிக்காக்கோ நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

லஷ்கர் இ தொய்பா இயக்கத்தின் உறுப்பினராக டேவிட் ஹெட்லி இருக்கிறார் என்றும் இந்தக் குண்டுவெடிப்பில் அவருக்கும் தொடர்பு இருக்கிறது என்றும் இந்தியா தெரிவிக்கிறது. பாகிஸ்தானில் பிறந்து அமெரிக்காவில் குடியேறிய ஹெட்லி மீது, 2005ஆம் ஆண்டு அங்குள்ள நாளிதழ் ஒன்று, முகமது நபியின் கார்ட்டூனை வெளியிட்டதற்காக அதன் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இந்த வழக்கில் கைதுசெய்யப்பட்டு 35 ஆண்டு சிறைதண்டனை அனுபவித்து வருகிறார். இந்த நிலையிலேயே விடுவிக்கப்படவுள்ள அவரைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு இந்தியா கோருகின்றது.

# ஆந்திராவில் அடுத்தடுத்து விஷவாயு! ஒருவர் சாவு - 3 பேர் கவலைக்கிடம்



இந்தியாவின் ஆந்திர மாநிலம் கர்னூல் மாவட்டத்தில் இரசாயன தொழிற்சாலைஒன்றிலிருந்து விஷவாயு கசிந்ததால் அந்தத் தொழிற்சாலையின் உயரதிகாரி உயிரிழந்தார்.

தொழிலாளர்கள் 3பேர் பாதிப்படைந்து அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப் பட்டுள்ளனர். ஆந்திர மாநிலம் விசாகப் பட்டினத்திலுள்ள எல்.ஜி. பொலிமர்ஸ் என்ற தொழிற்சாலையில் கடந்த மாதம் 7ஆம் திகதி அதிகாலையில் விஷவாயுக் கசிவு ஏற்பட்டதில் 15 பேர் உயிரிழந்தனர். பலர் சுவாசப் பிரச்சினை மற்றும் சரு மப் பிரச்சினைகளுக்கு உள்ளாகிச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையிலேயே இந்த மாநிலத்தின் கர்னூல் மாவட்டத்தில் மற்றொரு சம்பவம் நடந்துள்ளது. 'எஸ்.பி.வை. அக்ரோ இன்டஸ்ட்ரீஸ்' என்ற பெயருடைய இந்தத் தொழிற்சாலையில் நடந்த இந்த விஷவாயுக் கசிவு அங்கு பீதியை உண்டுபண்ணியிருக்கிறது. அடுத்தடுத்துத் தொழிற்சாலைகளில் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்வதால் இவை குறித்த விசாரணைகளுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# பரவுகின்றன வெட்டுக்கிளிகள்!

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தைத் தொடர்ந்து ஹரியாணா மாநிலத்தின் பல பகுதிகளிலும் அவதானிக்கப்பட்ட வெட்டுக்கிளிகளின் படை இந்தியாவில் மேலும் பரவ ஆரம்பித்துள்ளது.

வட இந்திய மாநிலமான ராஜஸ்தானில் கடந்த வெள்ளிக்கிழமையன்று பாலைவன வெட்டுக்கிளிகளின் கூட்டம் காணப்பட்டதாகவும் அவற்றை அழிப்பதற்கான குழுக்கள் அந்த மாநிலத்துக்கு அனுப்பப்பட்டதாகவும் இந்திய வேளாண்மை அமைச்சகம் தெரிவித்தது.

இந்தக் கட்டுப்பாட்டு முயற்சிகளில் இருந்து தப்பித்த வெட்டுக்கிளிகள் கூட்டம் ஹரியானா மாநிலத்தில் உள்ள ரேவாரி பகுதியில் மீண்டும் ஒன்று சேர்ந்தது அறியப்பட்டு அந்தப் பகுதியில் மறுநாள் சனிக்கிழமை காலையில் அவற்றை அழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த முயற்சிகளில் இருந்தும் அந்த வெட்டுக்கிளிகளின் பெருங்கூட்டத்தில் இருந்த பெரும் எண்ணிக்கையிலான வெட்டுக்கிளிகள் தப்பித்து மூன்று வெவ்வேறு குழுக்களாகப் பிரிந்து இந்தியாவின் பல்வேறு இடங்களுக்கும் பரவியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. ஹரியானா மாநிலத்திலுள்ள குருகிராம் பகுதி, உத்தர பிரதேச மாநிலம் ஃபரிதாபாத், உத்தரப்பிரதேச மாநிலத்தின் மையப் பகுதி என இந்தியத் தலைநகர் டெல்லியை ஒட்டி அமைந்துள்ள பகுதிகளில் இவை பரவியுள்ளன.

டெல்லியின் புறநகர் பகுதியான துவாரகாவில் பெருமளவிலான வெட்டுக்கிளிகளின் கூட்டம் காணப்பட்டது. ராஜஸ்தான், ஹரியானா, உத்தரப்பிரதேசம் ஆகிய மாநில அரசுகள் மற்றும் உள்ளூர் மாவட்ட நிர்வாகங்கள் ஆகியவற்றுடன் இணைந்து இந்த வெட்டுக்கிளிகளின் நகர்வைக் கண்காணித்து வருவதாக இந்திய வேளாண்மை அமைச்சகம் தெரிவித்துள்ளது.



# ஒரு கோடி கொரோனா உச்சம்

உலகளவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியைக் கடந்தது.

இதுவரை ஒரு கோடியே 87ஆயிரத்து 320பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் அதிகபட்சமாக அமெரிக்காவில் 25 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதாவது நான்கில் ஒருபங்கு பாதிப்பு அமெரிக்காவில் உள்ளது. கடந்த டிசம்பர் மாதம் சீனாவின் வுஹான் நகரில் பரவ ஆரம்பித்த இந்தத் தொற்று 6 மாதங்களுக்குள் உலகளவில் ஒரு கோடிப் பேரைப் பாதிப்புக் குள்ளாக்கியுள்ளது. இதிலிருந்து இதுவரை குணமடைந்தோர் எண்ணிக்கை 54 லட் சத்து 66 ஆயிரத்து 185பேராக உயர்ந்



துள்ளது. உயிரிழந்தோர் எண்ணிக்கை 5 லட் சத்து ஆயி ரத்து 419 ஆக அதிகரித்துள்ளது.

கோடை காலத்தில் கொரானா வைரஸின் தாக் கம் குறையும் என்று கூறப்பட்ட நிலையில் ஜூன் மாதத்தில்தான் இதுவரை இல்லாத அளவாக நாள் தோறும் 1.25 லட்சம் பேர் உலகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு கோடியில் மூன்றில் இரண்டு பங்கு மே மற்றும் ஜூன் மாதங்களில்தான் பதிவாகியுள்ளது.

உலகில் 38 நாடுகள் கொரோனா பாதிப்பிலிலுருந்து மீண்டுவிட்டன, சில நாடுகள் மீளும் தறு வாயில் இருக்கின்றன. இதில் சில சிறிய தீவு நாடு களான துவாலு, வனுவாட்டு, சாலமன்தீவுகள், நியூஸிலாந்து போன்றவை அடங்கும். இலங்கை, பூட்டான் ஆகிய சில நாடுகள் கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து மீழும் தறுவாயில் உள்ளன.



சீனாவின் வுஹான் புறநகரில் கொரோனா வைரஸ் நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதற்காகப் புதிய மருத்துவமனையைக் கட்டுவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோது ’புல்டோசர்கள்’ மூலம் நிலம் சரிசெய்யப்பட்டது.

# வெறுப்பூட்டும் பதிவுக்கு முகநூலில் இடமில்லை


## முகநூல் தலைவர் உறுதி



வெறுப்புணர்வைத் தூண்டும் பதிவுகளை முகநூல் பக்கங்களில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று முகநூல் நிறுவுனர் மார்க் ஜுகர்பெர்க் தெரிவித்துள்ளார்.

முகநூலில் இனவெறி, வன்முறையைத் தூண்டும் வகையில் இருக்கும் விளம்பரங்களுக்குத் தடை விதிக்க வேண்டும் என இருந்துவருகின்ற கோரிக்கைகளைச் சுட்டிக்காட்டி கொக்கக் கோலா நிறுவனம் தனது முகநூல்பக்க விளம்பரங்களை நிறுத்துவதாக அறிவித்துள்ள நிலையில், முகநூலில் வெறுப்புப் பேச்சுகள் உள்ளிட்ட விதிமுறைகளுக்கு எதிரான பதிவுகள் நீக்கப்படும் என அந்த நிறுவனத்தின் தலைவர் மார்க் ஜுக்கர்பெர்க் தெரிவித்துள்ளார்.

மேலும் போலியான கணக்குகள் மூலம் சமுதாயத்துக்குச் சீர்கேடு விளைவிக்கும் பதிவுகளை இடுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உட்பட அனைத்து அரசியல் தலைவர்களும் முகநூல் வரம்புக்கு உட்பட்டுத்தான் பதிவுகளை இடவேண்டும், அவர்களுக்கு எந்தவித சலுகையும் கிடையாது என்றும் அவர் கூறினார்.



# நவாஸ் மீது புதிய வழக்கு

பாகிஸ்தானில் 3 முறை பிரதமராக இருந்த நவாஸ் ஷெரீப் மீது புதிய வழக்கொன்று பதிவாகியுள்ளது.

பனாமா நீதிமன்ற ஊழல் வழக்கில் பாகிஸ்தான் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட அவருக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவர் லாகூரில் உள்ள மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார். தற்போது உடல் நலக்குறைவால் மருத்துவமனையில்சிகிச்சைபெற்று வருகிறார். இதனிடையே நவாஸ் ஷெரீப்மீது வழக்கொன்றுபதிவுசெய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 1986ஆம் ஆண்டு, நவாஸ் ஷெரீப்பஞ்சாப்மாகாணத்தின் முதலமைச்சராக இருந்தபோது அரச ஊழியர் ஒருவருக்கு விதிமுறைகளை மீறி நிலத்தை ஒதுக்கீடு செய்தது தொடர்பில் நவாஸ் ஷெரீப் உள்பட 4 பேர் மீது இந்த ஊழல் வழக்குப் பதிவு செய் யப்பட்டுள்ளது.

# விண்வெளியில் நடைப்பயணம்



விண்வெளியில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தில் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த விண்வெளி வீரர்கள் சுழற்சி முறையில் தங்கி ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நாசாவைச் சேர்ந்த கிறிஸ் கஸ்சிடி, ரோபர்ட் பென்கென் உள்ளிட்டோர் அங்கு ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அங்குள்ள உபகரணங்களுக்குப் பொருத்தப்பட்டிருந்த நிக்கல்ஹைட்ரஜன் மின்கலங்களுக்குப் பதிலாக அதிக சக்தி வாய்ந்த லிதியம் அயன் மின்கலங்கள் மாற்றும் பணி 2017ஆம் ஆண்டில் இருந்து நடந்து வருகிறது.

இந்தப் பணியின் போது வீரர்கள் விண்வெளியில் நடைப்பயணம் மேற்கொள்வது வழக்கம். அதன்படி, அமெரிக்க விண்வெளி வீரர்கள் கிறிஸ் கஸ்சிடி, ரோபர்ட் பென்கென் ஆகிய இருவரும் நேற்று முன்தினம் ஆய்வு மையத்தை விட்டு வெளியேறி விண்வெளியில் நடைப் பயணம் மேற்கொண்டு மின்கலங்களை மாற்றினர்.

# விளம்பரத்தை நிறுத்தியது ‘கொக்கக் கோலா’ நிறுவனம்




சர்வதேச குளிர்பான நிறுவனமான கொக்கக் கோலா சமூக ஊடகங்களில் விளம்பரம் செய்வதை 30 நாள்களுக்கு நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

வெறுப்புணர்வூட்டுகின்ற கருத்துகள் சமூக ஊடகங்களில் பகிரப்படுவதற்கு எதிரான போராட்டங்கள் சர்வதேச அளவில் எழுந்துள்ள நிலையில் சமூக ஊடக நிறுவனங்களுக்கும் இந்த விடயத்தில் பொறுப்பு இருக்கிறது.

அவர்களது தளங்களிலும் இந்த வகையான கருத்துகள் பகிரப்படுவதால், இதற்கு எதிரான நடவடிக்கையை அவர்கள் எடுக்க வேண்டும் என்று பலரும் கோரி வருகின்றனர்.

இந்த நிலையிலேயே இனவாதத்துக்கு இந்த உலகத்திலும் இடமில்லை, சமூக ஊடகங்களிலும் இடமிருக்கக்கூடாது என்று கூறி உள்ளது கொக்கக்கோலா. சமூக ஊடக நிறுவனங்கள் இந்த விடயத்தில் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் இதற்காக 30 நாள்களுக்குச் சமூக ஊடகங்களில் விளம்பரம் செய்வதை நிறுத்துகின்றோம் என்றும் அறிவித்துள்ளது கொக்கக் கோலா.

## அரேபிய கப்பல் பணியாளர்கள் 51 பேர் இன்று இலங்கை வருகை

அரேபிய கப்பல் பணியாளர்கள் 51 பேர் இன்று இலங்கையை வந்தடைந்தனர்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸூக்குச் சொந்தமான விசேட விமானத்தில், டுபாயிலிருந்து இக்குழுவினர் இன்று காலை 6.15 மணிக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அவன்கார்ட் கப்பல் நிறுவனத்துக்குச் சொந்தமான கப்பலில் பணியாற்றுவதற்காக இக்குழுவினர் வருகை தந்தனர்.

இவ்வாறு வருகை தந்த அரேபிய கப்பல் பணியாளர்கள், பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அதன் முடிவுகள் கிடைக்கும் வரை, அவர்கள் விமான நிலையத்திற்கு அருகிலுள்ள ஹோட்டல்களில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

## பெலாருஸில் சிக்கியிருந்த 290 பேர் நாடு திரும்பினர்!

கொழும்பு, ஜூன் 28

இலங்கைக்கு வர முடியாமல், பெலாருஸில் சிக்கியிருந்த இலங்கையர்கள் 290 பேரை ஏற்றிய ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸின் விசேட விமானம், இன்று அதிகாலை மின்ஸ்க் நகரிலுள்ள விமான நிலையத்திலிருந்து, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

இவ்வாறு வந்தவர்களில் பெரும்பாலானோர், உயர் கல்விக்காக புறப்பட்டுச் சென்றிருந்த இலங்கை மாணவர்களாவர்.

இவ்விமானப் பயணிகள், பெலாருஸின் மின்ஸ்க் நகரிலுள்ள விமான நிலையத்திலிருந்து வந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் UL 1206 எனும் விசேட விமானத்தில், இன்று காலை 10.02 மணி யளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவ்விமானப் பயணிகள் விமான நிலையத்தை வந்தடைந்ததை தொடர்ந்து, பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதற்கு முன்னர் பெலாருஸில் இருந்து ஒரு குழுவினர் இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட நிலையில், தற்போது இரண்டாவது குழுவினர் அழைத்து வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எந்தவோர் இனத்தையும் அடக்கியாளும் எண்ணத்துடன் அரசு செயற்படவில்லை!

## ஹக்கீமின் உரைக்கு அலிசப்ரி கண்டனம்



இன்றைய தேர்தல் காலத்தில் அரசு, ஜனாதிபதி மீதும் வெறுப்பை கக்குகின்ற அநாகரிக செயலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஈடுபட்டு வருகின்றார் என்று ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரி கடும் கண்டனத்தைத் தெரிவித்தார்.

எந்தவொரு இனத்தையும் அடக்கியாளும் எண்ணத்துடன் ஜனாதிபதியோ, அரசோ செயற்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

கண்டியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ரவூப் ஹக்கீம் நிகழ்த்திய உரையின்போது, ஜனாதிபதி தேர்தலில் தங்களுக்கு வாக்களிக்காதவர்களை அடக்கி ஆளும் இறுமாப்போடு ஆளும் தரப்பு ஈடுபட்டு வருகின்றது எனக் கூறியிருப்பது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரவூப் ஹக்கீம் போன்ற முதிர்ச்சியான அரசியல் தலைவர்கள் மக்கள் மத்தியில் வெறுப்புணர்வையூட்டும் விதத்தில் பேசுவது, அநாகரிகமான செயலாகவே பார்க்க வேண்டியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கவில்லை என்பதற்காக ஜனாதிபதி முஸ்லிம்களை பழிவாங்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டாரா எனக் கேட்க விரும்புகின்றேன்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்த பின்னர் எந்தச் சந்தர்ப்பத்திலும் முஸ்லிம்களையோ, ஏனைய சிறுபான்மை மக்களையோ பழிவாங்கும் மனப்பாங்கில் செயற்படவில்லை. எதிர்வரும் தேர்தலில் தமிழ், முஸ்லிம் சமூகங்களின் ஆதரவையே கோரி வருகின்றார். எந்தக் குற்றமும் செய்யாத ஒரு தலைவரைப் பார்த்து குற்றவாளியாகக்காட்டும் ஓர் அநாகரிகமான அரசியலையே இவர்கள் செய்து கொண்டிருக்கின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்று தாக்கத்தில் அனைவரையும் வேறுபாடு காட்டாமல் பாதுகாப்பதில் செயற்பட்டவர் ஜனாதிபதி. இக்காலகட்டத்தில் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன,மத பேதமின்றி அனைவருக்கும் ஐயாயிரம் ரூபா உதவித் தொகையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தது குற்றமா? எனக் கேட்டுவிரும்புகின்றேன்.

தேர்தல் மேடைகளில் வெறுப்பு பிரசாரங்களைச் செய்து மக்களை தவறான வழியில் இட்டுச் செல்லும் மோசமான அரசியல் கலாசாரத்தையே ஹக்கீம் போன்றவர்கள் மேடையேற்றி வருகின்றனர். இவர்களின் பொய்ப் பிரசாரங்களை ஏற்றுக் கொள்வதற்கு இனிமேலும் மக்கள் தயாராக இல்லை என்பதை வலியுறுத்திக் கூறவிரும்புகின்றேன் – என்றார்.

## உயர் அழுத்த மின் விநியோகத் தூண் விபத்தில் வாகனத்தின் மீது வீழ்ந்தது

### வவுனியாவில் இன்று காலை சம்பவம்

வவுனியா, ஜூன் 28

வவுனியா, கண்டிவீதியில் சிறிய ஹன்ரர் ரக வாகனமும், துவிச்சர வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இன்று காலை வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள வன்னி பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயம் முன்பாக இந்த விபத்து இடம்பெற்றது. இவ் விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது:-

முல்லைத்தீவிலிருந்து கொழும்பு நோக்கி மீன்களை ஏற்றிசென்ற சிறிய ஹன்ரர் ரக வாகனம், வவுனியாவில் அமைந்துள்ள வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலத்திற்கு முன்பாக சென்று கொண்டிருந்த போது அதே திசையில் பயணித்த துவிச்சக்கர வண்டியுடன் மோதி கட்டுப்பாட்டை இழந்து வீதி ஓரமாக இருந்த உயர் அழுத்த மின்சார தூணுடன் மோதி விபத்திற்குள்ளாகியது.

விபத்தில் உயர் அழுத்த மின்சார தூண் முழுமையாக சேதமடைந்த நிலையில் வாகனத்தில் மீது முறிந்து விழுந்தது. பொலிசார் அறிவித்ததைத் தொடர்ந்து உடனடியாக விரைந்து செயற்பட்ட மின்சார சபை ஊழியர்கள் அப் பகுதிக்கான மின் இணைப்பை துண்டித்ததுடன், வாகனம் தீப்பற்றி எரியாத வகையில் பவுசர் மூலம் பொலிஸாரால் தண்ணீரும் விசிறப்பட்டது. இதன் மூலம் பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டது.

இவ்விபத்தில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த மகேஸ்வரன் ரட்ணசிங்கம் (வயது 59) என்ற முதியவர் படுகாமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் விபத்து பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த விபத்து தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ -100)

# கிளிநொச்சி வைத்தியசாலையின் கழிவு நீர் வெளியேறுவதால் சிக்கல்

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் கழிவு நீர் வைத்தியசாலைக்கு வெளியே விடப்படுவதனால் தங்களது குடிதண்ணீர் நிலைகளை மாசுபடுத்துவதோடு, துர்நாற்றமும் ஏற்படுகிறது என வைத்தியசாலை சூழலில் வசிக்கின்ற பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி வைத்தியசாலையிலிருந்து கழிவு நீர் வெளியே ரை ஆறுக்குள் விடப்பட்டுவருகிறது. இந்த நீரானது ரை ஆறு ஊடாக கிளிநொச்சி குளத்தை வந்தடைகிறது. கிளிநொச்சி குளத்திலிருந்தே கிளிநொச்சிக்கான குடிதண்ணீருக்கு நீர் பெறப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆனால் வைத்தியசாலையிருந்து வெளியேறுகின்ற கழிவு நீரில் வைத்தியாசாலையின் இரசாயனங்கள் அடங்கியிருக்கலாம். எனவே அவற்றை சுத்திகரிக்கின்ற வசதிகள் கிளிநொச்சி குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தில் காணப்படுகின்றனவா?அங்கிருந்து குழாய் வழியாக விநியோகிக்கப்படும் நீரை தாம் குடிதண்ணீராகப் பயன்படுத்தலாமா என்பதனை நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினர் தெரிவிக்க வேண்டும் எனவும் பொது மக்கள் கோரியுள்ளனர்.

அதேவேளை வைத்தியசாலையின் அயலில் உள்ள மக்கள் கடந்த சிலமாதங்களாக வைத்தியசாலைக் கழிவு நீரானது தமது குடிதண்ணீர் ஆதாரங்களை மாசடையச் செய்கின்றன எனவும் அதிலிருந்து வெளிவரும் துர்நாற்றம் அயலில் வசிக்க முடியாத நிலை ஏற்படுகிறது எனவும் முறையிட்டும் இதுவரை அதனை நிவர்த்தி செய்வதற்கு எதுவித நடவடிக்கையும் நிர்வாகத்தினால் எடுக்கப்படவில்லை எனக் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் ராகுலனிடம் தொடர்பு கொண்டு வினவிய போது வைத்தியசாலையின் நீர் சுத்திகரிப்பு நிலையம் முழுமையான இயங்கவில்லை. எனவே இது தொடர்பில் நாம் உடனடி நடவடிக்கைக்கு மாகாண பணிப்பாளருக்கு அறிவித்திருகின்றோம். தற்போது கூறுவிலை கோரல் பெறப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. விரையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்த அவர் வைத்தியசாலையின் நீர் வைத்தியசாலைக்கு வெளியே செல்லவில்லை எனவும் தெரிவித்தார்

ஆனால் மக்களுடன் நேரடியாக குறித்த பகுதிக்குப் பிரதேச மக்களுடன் சென்று பார்வையிட்ட போது வைத்தியசாலைக்குள் இருந்து கழிவு நீர் வெளியேறிக் கொண்டிப்பதை அவதானிக்க முடிந்தது.







# பாடங்களை திட்டமிடுவதற்காக நாளை பாடசாலைகள் ஆரம்பம்

நாளை பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ள நிலையில், பாடசாலையின் முதல் வாரம் கொரோனா ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும் கலந்துரையாடி, பாடசாலைகள் மட்டத்தில் தீர்மானங்கள் எடுப்பதற்கான காலமாகும் என கல்வி அமைச்சு சுற்றுநிருபம் ஒன்றில் தெரிவித்துள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

ஒரு பாடவேளை 1 மணி நேரமாக திட்டமிடப்படும். இச்சுற்று நிருபத்தின் 02 வது பிரிவில் விடயங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

குறித்த பாட ஆசிரியர் தனது பாடவேளை ஆரம்பமாவதற்கு முன் 30 நிமிடங்களுக்கு முன் பாடசாலைக்கு சமுகமளிக்க வேண்டும். உதாரணமாக – ஒரு ஆசிரியருக்கு 11.00 மணிக்கே முதற்பாடம் ஆரம்பமாகுமாயின் – 10.30 மணிக்கு சென்றால் போதுமானது.

அவர் காலை 7.30 மணிக்கே செல்லவேண்டும் என்ற அவசியமில்லை. அத்துடன் – பி.ப 3.30 மணிவரை கற்பிக்கும் தேவை ஏற்படுமாயின் ஒரே ஆசிரியர் வாரத்தின் 5 நாள்களும் ஈடுபடாத வகையிலேயே நேரசூசி தயாரிக்கப்படவேண்டும். வாரத்தில் ஒரு நாள் ஒரு ஆசிரியர் 3.30 மணிவரை நிற்கக்கூடிய வாறே நேரசூசி தயாரிக்கலாம். இதனை அடிப்படையாகக் கொண்டு 3.30 மணிவரை நிற்க வேண்டிய ஆசிரியருக்கு – அன்றைய தினம் முதல் பாடவேளையை பிந்திய நேரமொன்றுக்கு வழங்கி நடைமுறைப்படுத்துவது தொடர்பாகத் திட்டமிடலாம்.

இந்தத் திட்டமிடலுக்காகவே – முதல்வாரம் ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் தரப்பட்டுள்ளது.

இரு தரப்பினரும் கலந்துரையாடி ஆரோக்கியமாக நேரசூசி தயாரித்து கற்பித்தலைத் திட்டமிடவேண்டும்.

பாடசாலை மட்டங்களில் இத்தகைய விடயங்களைத் திட்டமிடலாம் என சுற்றுநிருபம் கூறுகிறது.

இந்த திட்டமிடலில் எல்லா பாடசாலைகளுக்கும் பொதுவான பொதுக்கட்டமைப்பு உருவாக்கத்தேவையில்லை. ஆசிரிய ஆளணியைப் பொறுத்து தனித்தனியாக திட்டமிடலாம்.

இந்த நடைமுறைகளுக்காகவே – தனியான ஆவணமொன்றில் கையொப்பமிட இந்தச் சுற்றுநிருபம் கூறுகிறது.

லீவு எடுப்பதாக இருந்தால் – குறித்த ஆசிரியரின் பாடவேளைக்கு பதிலீட்டு ஆசிரியரை வழங்கி லீவு எடுக்கவும் இந்த சுற்றுநிருபம் அனுமதிக்கிறது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் ஆ.தீபன் திலீசன் தெரிவித்துள்ளார் .

# யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவுக்கு ஓக.7 கூடுகின்றது பேரவை?

யாழ்ப்பாணம், ஜூன் 28

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கான தெரிவு நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததும், எதிர்வரும் ஓகஸ்ட் 7ஆம் திகதி இடம்பெறவிருப்பதாக அறியவருகிறது.**

துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருப்பவர்களில் இருந்து திறமை அடிப்படையில் – மதிப்பீட்டின் படி – முதல் மூன்று இடங்களைப் பெறுகின்றவர்களின் பெயர்களை ஜனாதிபதியின் தெரிவுக்காகப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பரிந்துரைப்பதற்காக யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பேரவையின் விசேட கூட்டம் எதிர்வரும் ஓகஸ்ட் 7 ஆம் திகதி கூட்டப்படவுள்ளது.

துணைவேந்தர் தெரிவுக்காகப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய நடைமுறைகள் அடங்கிய சுற்றறிக்கையின் படி கோரப்பட்ட தற்கமைய 5 பேர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்துள்ளனர். இந்த ஐந்து பேரது தகுதி, தராதரங்களை மதிப்பீடு செய்து திறமை ஒழுங்கைத் தீர்மானிப்பதற்காக, விண்ணபதாரிகளின் விவரங்கள் மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

விண்ணப்பங்களை மதிப்பீடு செய்வதற்கென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட, மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் தலைமையிலான மூவரும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மூதவையின் சிபார்சுப்படி, பேரவையினால் நியமிக்கப்பட்ட இருவருமாக 5 பேர் கொண்ட மதிப்பீட்டுக்குழுவே துணைவேந்தர் விண்ணப்பதாரிகளின் தகுதி, தராதரங்களை மதிப்பிடும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இந்தக் குழுவின் உறுப்பினர்களால் தனித்தனியாக மதிப்பிடப்பட்டு வழங்கப்படும் அறிக்கை எதிர்வரும் ஆகஸ்ட் 7 ஆம் திகதி இடம்பெறும் விசேட பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் அதே நேரத்தில், பேரவை உறுப்பினர்களும் தனித்தனியாக விண்ணப்பதாரிகளைத் தனித்தனியாக மதிப்பிட்டுப் புள்ளிகளை வழங்குவர். மதிப்பீட்டுக்குழு, பேரவை ஆகியவற்றின் மதிப்பீடுகளின் படி – திறமை : முன்னுரிமை அடிப்படையில் மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படுவர். அங்கிருந்து பரிந்துரைகளுடன் உயர் கல்வி அமைச்சின் ஊடாக மூன்று பேரில் இருந்து ஒருவரை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக ஜனாதிபதி தெரிவு செய்வார். (ம)

# மேல் மாகாணத்தில் தொடர்ந்து சிக்கும் ஹெரோயின்

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மேல் மாகாணத்தில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் 212 கிலோ கிராம் ஹெரோயின் போதை பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன இதனை தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சி பொன்னகர்ப் பகுதியில் துடுப்பாட்ட மைதானம் அமையுமாம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜீன் 28

கிளிநொச்சி மாவட்டத்துக்கான துடுப்பாட்ட மைதானத்திற்காக பொன்னகர்ப் பகுதியில் 25 ஏக்கர் நிலம் ஒதுக்குவதற்கு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் பரிந்துரைத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்ட மைதானமாக கனிஷ்ட மகாவித்தியாலய மைதானத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் எழுத்த சர்ச்சை, கிளிநொச்சி மாவட்ட சர்வதேச மைதானத்தின் தற்போதைய நிலைமை, பாடசாலை மைதானத்தைத் திரும்பக் கையளிப்பின் பதில் மைதானம் போன்ற விடங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் நேற்றைய தினம் கிளிநொச்சி வந்திருந்தார்.

இதன்போது பாடசாலை மைதானத்தை நிரந்தரமாக பாடசாலையிடமே கையளிப்பதாகவும், சர்வதேச மைதானம் ஸ்தாபிக்கும் பணியை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதோடு துடுப்பாட்ட மைதானத்திற்காக பொன்னநகரில் 25 ஏக்கர் ஒதுக்குவதாகவும் மாவட்டச் செயலாளருக்குத் தெரியப்படுத்தப் பட்டுள்ளது.

# தீயணைப்பு வாகனம் பெற்றுதருமாறு யாழ் மாநகர சபை அவசர கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜுன் 28

யாழ்ப்பாணம் மாநகர சபை தீயணைப்பு படையின் தீயணைப்பு வாகனம் விபத்துக்குள்ளாகி முற்றாக சேதமடைந்துள்ளதால் தமது சபைக்கு அவசர தேவையாகவுள்ள தீயணைப்பு வாகனத்தைப் பெற்றுத்தருமாறு ஜனாதிபதி செயலகத்திற்கு மாநரக சபை பிரதி முதல்வர் து.ஈசன் கடிதம்மூலம் கோரியுள்ளார்.

அக்கோரிக்கைக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது:

கடந்த 16 ஆம் திகதி கடமையின் நிமித்தம் அவசரகால சூழ்நிலைக்குப் பதிலளிக்க முயன்றபோது நம்வசம் இருந்த ஒரேயொரு தீயணைப்பு வாகனமும் விபத்துக்குள்ளாகி ஒரு தீயணைப்பு வீரர் பலியானமையுடன் இருவர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இது வருத்தப்பட வேண்டிய விடயம். இதனால் எமது தீயணைப்பு வாகனம் முற்றிலும் சேதமடைந்துள்ளது.

இதனால் தீயணைப்பு சேவையை வழங்குவதற்கு எங்களுக்கு மாற்று வசதிஇல்லை என்பதால் யாழ்ப்பாண மாநகர சபைக்கு அவசரமாக ஒரு தீயணைப்பு வாகனத்தை பெறுவதற்கு தங்களிடம் கோருகிறோம். – எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# கருணா பற்றி எழுதினால் ‘பேஸ்புக்’ முடக்கப்படுமாம்

## அரசு எச்சரிப்பதாக கிரியெல்ல தகவல்

இராணுவத்தினரைக் கொலை செய்ததார் எனக் கருணா வெளியிட்ட கருத்துத் தொடர்பில் முகபுத்தக (‘பேஸ்புக்’) பக்கங்கள் ஊடாகக் கருத்து வெளியிட்டால், குறித்த நபரின் பேஸ்புக் கணக்கு தடை செய்யப்படும் என அரசாங்கத்தினால் எச்சரிக்கப்படுவதாக, முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

அத்துடன் கருணாவின் கருத்து தொடர்பில் கருத்து வெளியிட்ட நெருக்கமான நபரின் பேஸ்புக் கணக்கிற்கு அவ்வாறு அரசாங்கத்தின் எச்சரிக்கை அடங்கிய தகவல் கிடைத்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



இதேவேளை நல்லாட்சி அரசாங்கத்தினால் ஊடகவியலாளர்கள், தொழிற்சங்க தலைவர்கள் மற்றும் மத தலைவர்களுக்கு கருத்து வெளியிடும் முழுமையான சுதந்திர வழங்கப்பட்டது. எனினும், தற்போதைய அரசாங்கம் முழுமையாக அந்த சுதந்திரத்தை தடை செய்து வருவதாகவும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

மேலும் தேர்தலில் வாக்குறுதியளித்த ஊடக சுதந்திரம் இதுவா என அரசாங்கத்திடம் கேட்க விரும்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார் எனவும் குறிப்பிடப்படுகிறது.

# நூதனமான முறையில் கைபேசியை அபகரித்தோர் வசமாகச் சிக்கினர்

யாழ்ப்பாணம்,ஜுன் 28

யாழ்ப்பாணத்தில் நூதனமான முறையில் தொலைபேசி திருட்டில் ஈடுபட்ட நால்வரை யாழ்ப்பாண பொலிஸார் கைது கைது செய்து யாழ் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர்.

வீதியில் நிற்கும் சிறுவர்களிடம் சென்று தமது தங்கைக்குத் தவறான புகைப்படங்களையும், குறுஞ் செய்திகளையும் அனுப்புவதாக சிறுவர்களை பயமுறுத்தி புகைப்படங்களும், குறுஞ் செய்திகளும் பரிமாறப்பட்டுள்ளனவா எனத் தாம் பார்க்க வேண்டும் எனக் கூறி சிறுவர்களின் தொலைபேசிகளைக் களவாடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாடுகளுக்கு திருட்டு சம்பவங்களுடன் நேரடியாகத் தொடர்புடைய இருவரும், களவாடப்பட்ட தொலைபேசிகளை உடைமையில் வைத்திருந்த ஒருவரும், களவாடலுக்குப் பயண்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளின் உரிமையாளரும் என நால்வர் நேற்று முன்தினம் யாழ்ப்பாண குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று யாழ் நீதவான் நீதிமன்றில் அடையாள அணிவகுப்பிக்காக அவர்கள் முற்படுத்தப்பட்டனர். ஆயினும் அவர்கள் நால்வரும் குற்றத்தினை ஒப்புகொண்டமையினால் அடையாள அணிவகுப்பினை இடைநிறுத்தி வரும் செவ்வாய்க்கிழமை வரை தண்டனை தீர்ப்புக்காக அவர்களை விளக்கமறியலில் வைக்ககுமாறு யாழ் நீதுவான் பீற்றர் போல் உத்தரவிட்டார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஏழைகளும் மனிதர்களே!

**ஜூன் 28 இன்று உலக ஏழைகள் தினம்**

பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்

ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 28 ஆம் திகதி ஏழைகள் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. சமூகத்தில் உயர்ந்தவர்கள் – தாழ்ந்



தவர்கள், செல்வந்தர்கள் – வறியவர்கள், பெரும்பான்மையினர் – சிறுபான்மையினர், உயர்சாதி – தாழ்சாதி எனப் பல பாகுபாடுகள் காணப்படுகின்றன. இவர்களில் கீழ்நிலையில் காணப்படுவோர் பெரும்பாலும் விளிம்பு நிலை அல்லது அடி மட்டத்தினர் என்று கருதப்படுகின்றனர். சமூகத்தில் வாழ்கின்ற விளிம்பு நிலை மக்களுக்குள் ஏழைகளும் உள்ளடக்கப்படுகின்றனர். ஏழைகள் தங்களுடைய அடிப்படைத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் சமூகத்தில் வாழ்கின்றனர். ஏழ்மையான வாழ்க்கையை வாழ்கின்ற மக்களைச்



சராசரி மனிதர்களாகக் கருதாத நபர்களையும் சமூகத்தில் காணமுடிகின்றது.

### ஏழைகள் உருவாக்கம்

அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகள் மற்றும் குறைவிருத்தி நாடுகள் அனைத்திலும் ஏழைகள் வாழ்கின்றனர். சந்தைப்பொருளாதாரத்தில் தனியார் துறையின் பங்கு அதிகரிக்கப்பட்டு பொதுத் துறையின் பங்கு குறைக்கப்படும் போது வருமான சமத்துவமின்மை ஏற்படுகின்றது. இவ்வாறு வருமான சமத்துவமின்மை அதிகரித்துக் காணப்பட்டால் அங்கு வறுமை அதிகரித்து ஏழைகள் உருவாகின்றனர். போதியளவு உணவு, பாதுகாப்பான குடிநீர், வீட்டு வசதி, சிறுவர்களுக்கான சிறந்த கல்வி, போசாக்கு, சிறப்பான வாழ்க்கைத்தரம், சிறந்த ஆரோக்கியமான மருத்துவ மற்றும் சுகாதார வசதி, சிறந்த கல்வி,போதுமான வருமானமின்மை, சிறந்த வேலைவாய்ப்பு, சிறந்த உட்கட்டமைப்பு வசதி இது போன்ற பல வசதிகள் இல்லாமல் தங்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாதிருப்பவர்களை ஏழைகள் என்று அழைக்கின்றனர்.

### புறக்கணிப்புகள்

ஏழைகள் சமூகத்தில் பல அசௌகரியங்களையும், பல்வேறுபட்ட புறக்கணிப்புக்களையும் எதிர்கொள்கின்றனர். மனதளவில் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். அதிகார வர்க்கம் மற்றும் முதலாளிகளின் கீழ் வேலை செய்கின்ற ஏழை மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர். ஏழைகள் அவர்களின் குடும்ப உறவினர்களும், படைத்த இறைவனும்தான் எமக்குத் துணை என்று தம்மைத் தாமே தேற்றிக் கொண்டு வாழ்கின்றனர். சமூகம் ஏழை மக்களை புறக்கணிக்கின்றது. அவர்களும் தம்மைப் போன்ற மனிதர்கள்தான் என்று கருதுவதை மறந்து விடுவது கவலைக்குரியது. எங்கு சென்றாலும் ஏழைகள் புறக்கணிக்கப்படுகின்றனர். வேலை செய்கின்ற இடங்கள், கல்வி கற்கின்ற இடங்கள், விழாக்கள், நிகழ்வுகள், திருமணவீடுகள், சுப காரிய நிகழ்வுகள், வணக்கஸ்தலங்கள், பொதுக் கூட்டங்கள் போன்ற பல இடங்களில் ஏழைகள் புறக்கணிக்கப்பட்டு, அவமானங்களை எதிர் கொள்கின்றனர். ஏழைகளின் கருத்திற்கு எந்தவிதமான மதிப்பும், முக்கியத்துவமும் கொடுப்பதில்லை. பொதுவாக ஏழைகள் ஏழைகளோடும், பணக்காரர்கள் பணக்காரர்களோடும் தான் சேருவார்கள் என்று மனதளவில் பாதிக்கப்பட்ட ஏழைகள் கூறுவார்கள். இது தான் யாதார்த்தம்.

### மாணவர்கள் மத்தியில் பாகுபாடு

சமூகத்தில் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஏழைகளைப் பிரித்துப்பார்க்கின்ற தன்மையைக் காணலாம். உதாரணமாகக் கல்வி கற்கின்ற இடங்களில் சக மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் பிரித்துப்பார்க்கின்ற தன்மை காணப்படுகின்றது. ஒருவகுப்பில்ஏழைமாணவர் ஒருவர் காணப்பட்டால் வசதி படைத்த மாணவர்கள் ஏழை மாணவனோடு பழக மாட்டார்கள், ஏழை மாணவன் வகுப்பில் முதலிடத்தில் காணப்படும்போது வசதி படைத்த மாணவர்கள் அந்த ஏழை மாணவர்கள் மீது பொறாமை கொண்டு, அவனது ஏழ்மைத் தன்மையைக் குத்திக்காட்டிப் பேசி மனதளவில் பாதிப்படையச் செய்கின்றனர். இதே போன்றுதான் ஆசிரியர்களும். வசதி படைத்த மாணவர்களைப் பார்க்கின்ற விதம் ஒரு விதமாகவும், ஏழை மாணவர்களை வேறொரு விதத்திலும் பார்க்கின்ற தன்மை உள்ளது. இவ்வாறு வேறுபடுத்திப் பார்க்கும் போது ஏழை மாணவன் மனதளவில் மிகவும் பாதிக்கப்படுகின்றான். அவனின் மனது பாதிக்கப்படுகிறது. மகத்துவமாக கல்வியைக் கற்றுக் கொடுக்கின்ற குரு இவ்வாறு பாரபட்சம் பார்ப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.



### சமூகத்தில் புறந்தள்ளல்

சமூகத்தில் திருமண வைபவம், பிறந்த நாள் நிகழ்வு, மற்றும் ஏனைய சுப காரியங்கள் இடம்பெறுகின்ற போதும் ஏழைகள் புறந்தள்ளப்படுகின்றனர். தமக்குத் தேவையான வேலைகளை ஏழைக்குடும்பத்தில் உள்ள நபர்களுக்கு ஊடாகச் செய்து முடிப்பதும், தமது வீட்டில் நிகழ்கின்ற கொண்டாட்டங்களின் போது அவர்களைப் புறந்தள்ளுவதும்கூட வசதிபடைத்த ஒரு சிலரால் முன்னெடுக்கப்படுகின்றது.

சிலர் எமது வீட்டிற்கு அருகில் இருக்கின்றார்களே என்ற மனதுடன் நல்ல காரியங்கள் இடம்பெறும் போது ஏழைக் குடும்பத்திற்கும் அழைப்பிதழ் கொடுக்கின்றனர். அழைத்து விட்டார்கள் என்பதற்காகச் செல்கின்ற சந்தர்ப்பத்தில், அங்கு வருகின்ற வசதி படைத்த நபர்களுக்குக் கொடுக்கின்ற வரவேற்பு, உணவு பரிமாறல் மற்றும் கவனிப்பு முறை போன்றவற்றை ஏழைகளுக்கு கொடுக்கத்தவறுகின்றனர். மனித மான்பும், மனிதாபிமானமும் இந்தச் சந்தர்ப்பத்தில் இழக்கப்படுகின்றது.

### துன்புறுத்தும் முதலாளித்துவம்

ஏழைகள் செல்வந்தர்களிடம் வேலைகள் செய்து தங்களது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடாத்துகின்றனர். உதாரணமாக வீட்டு வேலைகள் செய்கின்ற சந்தர்ப்பங்களில் ஏழைகள் பாதிக்கப்படுகின்றனர். அடித்துத் துன்புறுத்தப்படுகின்றனர். முதலாளிமார் சாப்பிட்டு விட்டு எஞ்சிய உணவை உண்ணும் நிலையும் காணப்படுகிறது. முதலாளிகளின் வாய்ச்சவடலால் மனதளவிலும் பாதிக்கப்படுகின்றனர்.

### ஏழைகளிடம் மனிதம்

ஏழை மக்களிடம் காணப்படுகின்ற அன்பு, இரக்கம், கருணை, உதவும் தன்மை. போன்ற பல மகத்தான நல்ல குணங்கள் வசதி படைத்தவர்களிடம் காணப்படுகின்றதா? என்பது கேள்விக்குறியே. பணம், பொருள் வசதி இல்லாவிட்டாலும் மனிதாபிமானத் தன்மையில் ஏழைகள் உயர்ந்த இடத்தில் காணப்படுகின்றனர். இன்னும் சில ஏழை மக்கள் வசதி படைத்தவர்களுக்குப் பயந்து நடுங்கி வாழ்கின்றனர்.

ஏழைகள் எப்போதும் ஏழைகளாகவே இருக்க மாட்டார்கள். அவர்களுக்கு விடிவுகாலம் வரும். தங்களது முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்தும் தங்களது வறுமையை நீக்கித் தங்களது வாழ்வில் ஒளியேற்ற அயராது உழைக்க வேண்டும். ஏழைகளாக பிறந்து தங்களது முயற்சியால் வாழ்வில் முன்னேற்றமடைந்தவர்கள் ஏராளம். அதேபோன்று



ஏழைகளாகப் பிறந்து வாழ்வில் முன்னேறி ஏழைகளுக்காகவே தம்முடைய வாழ்வினை அர்ப்பணித்த மா மனிதர்கள் பலர் இவ்வுலகில் காணப்படுகின்றனர்.

### ஏழைகளுக்கு உதவுதல்

ஏழைகளின் வாழ்வில் இருள கற்றி ஒளியேற்ற அரசு, அரச சார் பற்ற நிறுவனங்கள், மற்றும் ஏனைய அமைப்புக்கள்தான் முன் வரவேண்டும்என்றகட்டாயமில்லை. மாறாகச் சமூகத்தினராகிய நாமும் ஏழைகளின் வாழ்வினை முன்னேற்றவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

குறைந்தது அவர்களின் அடிப்படைத் தேவையினையாவது நிறைவேற்றிக் கொடுப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதுமட்டுமின்றி சுய தொழில் வாய்பினை ஊக்குவித்தல்,சிறிய அளவிலான நுண்கடன் உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல், பொருளாதாரத்தை ஈட்டுவதற்குத் தேவையான வசதி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல், குடும்பத்தினுடைய அபிவிருத்திப் பாதைக்கு உதவுதல், பிள்ளைகளுடைய நலன்களைக் கருத்தில் கொண்டு கல்வி நடவடிக்கைக்குத் தேவையான கற்றல் உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல், அவர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளை இனங்கண்டு அதனைத் தீர்ப்பதற்கான முயற்சியில் ஈடுபடுதல் போன்ற பல நடவடிக்கைகளை மேற்கொண்டு ஏழைகளின் வாழ்க்கையை முன்னேற்றுவது சமூகத்தினராகிய எமக்கு இருக்கின்ற முக்கிய கடமையாகும். இதுவே இன்றை தினத்தில் செய்ய வேண்டிய மகத்தான சேவையாகும்.

கட்டுரையாளர் - கிழக்குப்பல்கலைக்கழக சமூகவியல் துறை மாணவர்.

# தமிழர்களின் வாக்குகளைச் சூறையாட நிதியைக் கொட்டும் தெற்குக் கட்சிகள்

## எச்சரிக்கின்றார் சுரேஷ் பிறேமச்சந்திரன்



*கொழும்பு, ஜூன் 28*

**அரசாங்கத்தை சார்ந்த கட்சிகள் தமிழ் மக்களின் வாக்குகளை சூறையாடுவதற்காக பல கோடி ரூபாக்களை செலவு செய்கின்றார்கள் என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் கூறியுள்ளார்.**

யாழ்ப்பாணம், கட்டைப்பிராயில் உள்ள அவருடைய வீட்டில் இன்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் இப்போது தேர்தல் சூடு பிடிக்க ஆரம்பித்திருக்கின்றது. அரச தரப்புக்கு ஆதரவாக பல்வேறுபட்ட தமிழ் தரப்புக்களும் களத்தில் இறங்கி இருக்கின்றன.

ஒரு பக்கத்தில் அங்கஜன் இராமநாதன் தான் என்ன விலை கொடுத்தேனும் வெல்லவேண்டும் என்பதற்காக பல கோடிகளை செலவு செய்துகொண்டிருக்கின்றார்.

அண்மைக் காலத்தில் டக்ளஸ் தேவானந்தாவும் கூடத் தான் மீண்டும் அமைச்சராக வரவேண்டும் எனும் அடிப்படையில் கடுமையாக உழைக்க ஆரம்பித்திருக்கின்றார். அவரிடம் இருத்து பிரிந்துபோன சந்திரகுமார் சுயேச்சை குழுவாக நின்று தானும் ஒரு அமைச்சராக வரமுடியும் என்ற நிலையில் இருந்து வேலைகளைச் செய்துகொண்டு இருக்கின்றார்.

இதற்கு மறு பக்கத்தில் தொலைபேசியினுடைய சின்னத்தில் சஜித் பிரேமதாஸவினுடைய கட்சி களமிறங்கியிருக்கின்றது. விஜயகலா மகேஸ்வரன் அவர்கள் யானை சின்னத்தில் போட்டியிடுகின்றார்.

அரச தரப்பில் இருந்து குறைந்தபட்சம் ஏழு, எட்டுக்கு மேற்பட்ட கட்சிகளும், சுயேச்சை குழுக்களுமாக இப்போது இறங்கியிருக்கின்றார்கள்.

இன்று அவர்கள் மக்களுக்கு கொடுக்கக்கூடிய உறுதிமொழிகள் எல்லாம் நாங்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்புத் தருவோம் என்ற விடயம்தான். ஏட்டிக்கு போட்டியாக எல்லோரும் அதனையே சொல்லத் தொடங்கியிருக்கின்றார்கள்.

ஆனால் நிச்சயமாக அரசாங்கத்தால் எல்லோருக்கும் அவ்வாறான வேலைகள் கொடுக்கமுடியாதுஎன்பதுஅனைவருக்கும் தெரியும். இருந்த பொழுதும் கூட அரசாங்கத்தில் வந்தால் இவர்கள் வேலைவாய்ப்பு தருவார்கள் என்ற நம்பிக்கையில் கூட சிலபேர் அவர்களுக்கு பின்னால் நிற்கின்றார்கள் என்பது உண்மை.

ஆனால் அந்த விடையத்தை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். என்னவென்றால் அரசாங்கம் தாங்கள் 1 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதாக கூறினால்கூட அவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கான நிதி ஆதாரம் அரசாங்கத்திடம் இருக்கின்றதா? அதுவும் கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்பட்டிருக்கக் கூடிய சூழ்நிலையில், சம்பளமே கொடுக்க முடியாத சூழ்நிலையில் புதிய வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும் என்ற ஒரு கற்பனையில் நீங்கள் இவ்வாறானவர்களுக்கு பின் செல்வது என்பது எதிர்வரக்கூடிய, இப்போது ஆரம்பித்திருக்கக் கூடிய ஓர் இராணுவ கட்டுப்பாட்டுடன் கூடிய அரசாங்கத்தை நீங்கள் இன்னும் பலம் மிக்கதாக ஆக்குவதாகத்தான் முடியும்.

ஆகவே இப்போழுதே ஏறத்தாழ் 30 இராணுவ அதிகாரிகள், மேஜர் ஜெனரல் தரத்தில் இருக்கக்கூடியவர்கள், பிரிக்கேடியர் தரத்தில் இருக்கக் கூடியவர்கள் நாட்டின் நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இராணுவத்தினர் இப்போது துறைமுக அதிகார சபையின் தலைவராக இருக்கின்றார்கள், சுகாதார அமைச்சிக்கு செயலாளராக இருக்கின்றார்கள். இது போன்ற பல துறைகளில் நிர்வாகிகளாக இருக்கின்றார்கள்.

தேர்தலுக்கு பிற்பாடு நிச்சயமாக இது இன்னும் மேலே சென்று வடகிழக்கு மாத்திரம் அல்ல, முழு இலங்கையுமே இராணுவ மயப்பட்டதாக மாறுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. அதற்கு எம்மவர்கள் துணை போவதென்பது நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாத விடயம்.

ஒரு ஜனநாயக சூழலை, தமிழ் மக்கள் பேசக்கூடிய சூழலை, தமிழ் மக்கள் தங்கள் தங்கள் உரிமைகளுக்கு போராடக் கூடிய சூழலை எநாங்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதும் தவிர்க்க முடியாத ஒரு விடயமாக இருக்கின்றது.

ஆகவே இந்த நிலைமையை மக்கள் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம். என்றார்.

## கட்டுநாயக்கா விமான நிலையம் ஓக. I இல் திறக்கப்படமாட்டாது

வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை மீளத் திறக்கத் திட்டமிடப்பட்ட போதிலும் அத்திகதியில் அது திறக்கப்படமாட்டாது என தகவல்கள் வெளியாகியுள்ளது.

இத்தகவலை விமான சேவைகள் நிறுவனப் பணிப்பாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

பல நாடுகளில் இன்னும் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகமாக இருப்பதால் விமான நிலையம் திறக்கும் திட்டம் பிற்போடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார் என அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## 8 கால்களுடன் ஆட்டுக்குட்டி வவுனியாவில் அதிசயப் பிறப்பு

வவுனியா மதியாமடு பகுதியில் எட்டு கால்களுடன் ஆட்டுக்குட்டி ஒன்று பிறந்துள்ளது.

இவ்வாறு பிறந்த ஆட்டுக் குட்டியின் உடல் நிலை ஆரம்பத்தில் நன்றாக காணப்பட்ட போதிலும் தற்போது சற்று ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.

இந்த ஆட்டுக்குட்டியை பெரும் எண்ணிக்கையானோர் சென்று பார்த்து வருகின்றனர்.

(உ - 100)



## மோதரை விஷ்ணு ஆலயத்தில் மஹிந்தர்







**இன்று காலை, கொழும்பு மோதரை விஷ்ணு ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு வழிபாடுகளில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார். அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.**





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.06.2020 இல் வெளியிடப்பெற்றது.